## கடலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார்.இ.ஆ.ப.,

ந.க.எண்.பஇ1/2625/2025

நாள்: 31.01.2026

**பொருள்:** NLCIL - CSR - 2025 - 2026 - கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியிலிருந்து கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட அரசுப் பள்ளிகளில் STEM ஆய்வகங்கள் அமைத்தல் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடுதல்.

**பார்வை:**

1. கடலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.பஇ1/2625/2025, நாள்.04.07.2025.
2. கடலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன கூட்ட நாள். 08.10.2025.
3. கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகள்.
4. கடலூர், மாவட்ட நிர்வாகம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன புரிந்துணர்வு ஒப்பந்த நாள்.30.01.2026

**XXXXX**

**உத்தரவு:**

கடலூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் வாயிலாக அடிப்படை வசதிகள், மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற அத்தியாவசியப் பணிகளை 2025 - 2026 ஆண்டு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியிலிருந்து செயல்படுத்திட பார்வை 1-இல் காணும் கடிதம் வாயிலாக நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன பொது மேலாளருக்கு (CSR) முன்மொழிவு அனுப்பப்பட்டது. மேற்படி முன்மொழிவு அனுப்பப்பட்ட பணிகள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டு கடலூர், மாவட்ட நிர்வாகம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தினால் பார்வை 4-ல் காணும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுதிடப்பட்டது.

அதனடிப்படையில், கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட 10 அரசுப் பள்ளிகளில் STEM ஆய்வகங்கள் அமைத்தல் பணியினை மேற்கொள்ள ரூ.100.00/- (ரூபாய் நூறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் 2025 – 2026 மற்றும் 2026 - 2027 ஆண்டு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியிலிருந்து முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**Name of the Department: School Education Department, Cuddalore.**

| S. No | Name of the Work | Year | Est. Cost (Rs. in Lakhs) |
|---|---|---|---|
| 1. | STEM Labs in Schools in Cuddalore District.<br><br>(1. GHS – Kothattai, 2. GHS – Sakkankudi, 3. GMHSS – Nallur, 4. GGHSS – Kurinjipadi, 5. GHSS – Marungur, 6. GGHSS – Vadalur, 7. GGHSS – Thirupapuliyur, 8. GHSS – Karunkuzhi, 9. GHSS – Samiyarpettai and 10. MHS – Thirukkandeswaram.) | 2025-26 | 50.00 |
| | | 2026-27 | 50.00 |
| **TOTAL** | | | **100.00** |

<u>நிபந்தனைகள்:-</u>

1. Neyveli NLC India Ltd., நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு அந்நிறுவனத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கை (MoU)-ல் இடம் பெற்றுள்ள அனைத்து வழிமுறைகளையும் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும்.
2. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் அதன் விதிகள் 2000 ஆம் ஆண்டு மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி சட்டங்களை முழுமையாக பின்பற்றி, மின்னணு (e-Tender) முறையில் ஒப்பந்தப் புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
3. மேற்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்படும் முன்னர் உரிய அலுவலரிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளி கோருதல் தொடர்பான பணிகளை உடனடியாக இறுதி செய்யப்பட வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி முடிவு பெற்றவுடன் ஒப்பந்த இசைவு பெற்று, வேலை உத்தரவு வழங்கப்பட்டு உடனடியாக வேலை தொடங்கப்பட வேண்டும்.
6. ***மேற்காணும் நிபந்தனைகள் 2, 3, 4, மற்றும் 5-யை பொருந்தும் இடங்களில் (wherever applicable) பின்பற்றிட <u>தெரிவிக்கப்படுகிறது</u>***
7. அனுமதிக்கப்பட்ட பள்ளிகளுக்கு மாற்றாக வேறு பள்ளிகளில் கண்டிப்பாக செய்யக்கூடாது. அவ்வாறு மேற்கொள்ளப்படும் பணிக்கு பின்னேற்பு வழங்கப்படமாட்டாது.
8. இப்பணியினை NLC India Ltd., நிறுவனத்திலிருந்து பார்வையிட வரும்பொழுது அனைத்து பணி விவரங்களும் பார்வைக்கு உட்படுத்த வேண்டும்.
9. முதன்மைக் கல்வி அலுவலர் பணிக்குரிய ஆவணங்கள் அனைத்தும் முறையாக பராமரித்து, அதற்கான 3 நிலை புகைப்படங்கள் (பணி துவங்குவதற்கு முன், பணி நடைபெறும் போது மற்றும் முடிவுற்ற நிலை) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. NLCIL நிறுவனத்தின் CSR நிதி உதவியுடன் ஆய்வகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்ற கீழ்காணும் விவரத்துடன் கூடிய நிலையான பெயர் பலகையில் முழுமையாக பதிவு செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| NLC INDIA<br>CREATING WEALTH FOR WELLBEING | Name of the Work<br>Supported under CSR by<br>NLC INDIA LIMITED<br>Implemented by DRDA Cuddalore<br>Project Cost: Rs.<br>Financial Year: |

11. பணிகளின் முன்னேற்ற அறிக்கையினை பிரதி மாதம் 5-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியரகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், இப்பணிக்குரிய ஆவணங்கள் அனைத்தும் தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும்.
12. ஆய்வகப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் மூலம் கூட்டாய்வு செய்த பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MoU) தெரிவிக்கப்பட்டுள்ள படிநிலைக்கேற்ப NLCIL நிறுவனத்தால் தொகை விடுவிக்கப்படும். CSR நிதியிலிருந்து பணி செயல்படுத்தும் துறைக்கு அந்தந்த நிலைக்கேற்ப பகுதிப் பட்டியல் / இறுதிப் பட்டியலுக்கான (Part bill / Final bill) கேட்புக் கடிதத்தினை உரிய ஆவணங்களுடன் கடலூர், மாவட்ட ஆட்சியரக, வளர்ச்சி பிரிவில் சமர்ப்பித்தவுடன் CSR கணக்கிலிருந்து தொகை விடுவிக்கப்படும்.
13. ஒப்பந்த காலத்திற்குள் பணிகளை முடிக்கத் தவறினால் அதற்குரிய காரணத்தினை 15 தினங்களுக்குள் முன்னர் மாவட்ட ஆட்சியருக்குக் குழு கூட்டத்தில் எழுத்து மூலம் விளக்கத்தினை அளித்து ஒப்பந்த காலத்தினை நீட்டித்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். தவறின் பணி செயல்படுத்தும் அலுவலரே இதற்கான முழு பொறுப்பேற்க வேண்டும்.

இச்செயல்முறை ஆணையினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் உடன் அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

பெறுதல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
கடலூர் மாவட்டம்.

31/01/26

நகல் : இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை.

நகல் : கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர்.

நகல் : பொது மேலாளர் (CSR), நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி.

நகல் : பஇ1 பிரிவு இருப்பு கோப்பிற்கு.